பக்கங்கள்:-23

# காலை முரசு

முழுக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 20 | செவ்வாய்க்கிழமை | 04.03.2025 | அதிர்வு 212

## யாழில் நேற்று 11 வயது சிறுவன் பரிதாபச் சாவு!

விரிவான செய்தி 3 ஆம் பக்கம்

## ஒட்டுக்குழுக்களோடு இணைவதன் மூலம் தமிழ்த் தேசியத்தை விட்டுக்கொடுக்கும் வேலையைச் செய்யோம் என்கின்றார் சரா

### தேசியத்தின் பாதையில் தனித்து தங்கள் அரசியல் பயணம் தொடருமாம்



“ஒட்டுக்குழுக்களோடு இணைந்து தமிழ்த் தேசியத்தை ஒருபோதும் விட்டுக்கொடுக்கோம். தேசியத்தின் பாதையில் தனித்து எமது அரசியல் பயணம் தொடரும்.”

– இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளருமான ஈ.சரவணபவன்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் சங்குச் சின்னத்தில் சனநாயகத் தமிழரசுக் கட்சி போட்டியிடப்போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், அது தொடர்பில் புலம்பெயர் ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 06

# முதலமைச்சர் வேட்பாளராக நான் களமிறங்கவேமாட்டேன்

### தமிழரசின் எம்.பி. சிறீதரன் திட்டவட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

**“வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடும் எண்ணம் எனக்குத் துளியளவும் இல்லை.”**

**– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.** 07




## சுகாதார ஊழியர்களும் பணிப்புறக்கணிப்பு




சுகாதார ஊழியர்களுக்கான சலுகை மற்றும் மேலதிக சேவைக் 07

## நாடளாவிய ரீதியில் வைத்தியர்கள் நாளை வேலைநிறுத்தப் போராட்டம்

நாடுதழுவிய ரீதியில் நாளை புதன்கிழமை வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

வைத்தியர்களின் கொடுப்பனவுகளைக் குறைக்கும் அரசின் முடிவுக்கு எதிராக அரச வைத்தியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அரச 07






உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் எந்தச் சமயத்திலும் அறிவிக்கப்படலாம், அறிவிக்கப்பட்டதும் அதுவரையில் உரிய ஆயத்தங்களைச் செய்யாத தமிழ்க் கட்சிகள் கடைசி நேரத்தில் தடுமாறி, குழப்பி அடிக்கும் என்றும் நேற்று இப்பத்தியில் தெரிவித்திருந்தேன்.

நேற்றுப் பத்திரிகை வெளியாகி சில மணி நேரம் கடந்த நிலையில், தேர்தல் அறிவிப்பு வந்துவிட்டது.

தமிழ் கட்சிகளின் நிலைமை தொடர்பில் ஸாம்பிளுக்கு ஒரு தகவல்.

சரியோ, பிழையோ ஏனைய தமிழ் கட்சிகளோடு ஒப்பிடுகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனநாயகக் கட்டமைப்பு கொண்டது என்பது தெரிந்ததுதான். அந்தக் கட்சியைப் பொறுத்தவரை தேர்தல்களை எதிர்கொள்வதற்கு – குறிப்பாக வேட்பாளர்கள் தெரிவை அங்கீகரிப்பதற்கு – நியமனக் குழு ஒன்று நிச்சயம் அவசியம். பொதுவாக அந்தக் குழுவை நியமிக்கும் அதிகாரம் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவுக்கு 06

# சுயாதீன ஊடக செயற்பாட்டிற்கு அநாவசியமான கட்டுப்பாடுகளை நீக்குமாறு ஐ.நா. வலியுறுத்தல்




சமூகத்தின் குடியுரிமை மற்றும் சுயாதீனமான ஊடகங்களின் செயல்பாட்டிற்கு அநாவசியமான விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாட்டுக்களை நீக்குவதற்கு இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்தானிகர் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது அமர்வில் நேற்று உரையாற்றிய சர்வதேச செயல்பாட்டுப் பிரிவின் இயக்குனர் மாரிட் கோஹோனென் ஷெரிப் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து தற்போதைய தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

மனித உரிமைகளில் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை அடைவதற்கும், சமூகங்களுக்கு இடையேயான பிளவுகளைத் தீர்ப்பதற்கும், அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள முக்கியமான வாய்ப்பு இதுவாகும் எனவும் அவர் தனது உரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

புதிய ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் தனது ஆரம்ப உரையில், பல தசாப்தகாலமாக இனங்களுக்கு இடையேயான பிளவு மற்றும் இனவெறியால் ஏற்பட்ட தீங்குகளை ஏற்றுக் கொண்டதாகவும், ஊழல்களுக்கு எதிராகச் செயல்படுவது மற்றும் ஏப்ரல் 21 தாக்குதல்கள் மற்றும் பிற குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்வதுடன் நீண்டகாலமாக மனித உரிமைகள் விடயத்தினை நிவர்த்தி செய்வதற்கும் உறுதியளித்துள்ளார் எனவும் ஆணையாளர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு மோதல்களின் போதும், அதற்கு முந்திய கிளர்ச்சிகளின் போதும், நடந்த பாரிய மனித உரிமை மீறல்களுக்கு, தற்போது வழங்கப்பட்ட உறுதிமொழிகள் பேணப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மட்டு. ஆரையம்பதி கடற்கரையில் ஒதுங்கிய மர்மப்பொருள் வெடித்ததில் ஒருவர் படுகாயம்

## அது வெளிச்சக் குண்டு எனக் கண்டறியப்பட்டது



(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி திருநீற்றுக்கேணி பிரதேச கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கியுள்ள நிலையில் இருந்த மர்மப்பொருள் ஒன்றை கண்டெடுத்த நிலையில் அது வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாலையில் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

திருநீற்றுகேணி பிரதேசத்தைச் சேர்ந்த 4 இளைஞர்கள் நேற்று மாலையில் இந்தக் கடலில் நீராடச் சென்றனர். இதன்போது அங்கு கரையொதுங்கியிருந்த மர்மபொருள் ஒன்றை கண்டெடுத்து அதன் பகுதியில் இருந்த நூலை இழுத்த போது அது வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அந்தப் பொருளைக் குண்டு செயலிழக்கும் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் பரிசோதித்ததில் அது வெளிச்சக் குண்டு என கண்டுபிடித்தனர். வெடித்துச் சிதறிய அதன் பாகங்களை மீட்டனர்.

இந்த குண்டுவெடிப்பையடுத்து அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய வரதராஜன் கவிந்துஜன் என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் தந்தையின் உழவு இயந்திரத்தினுள் சிக்கி 11 வயது சிறுவன் பரிதாப உயிரிழப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

தந்தையின் உழவு இயந்திரத்தினுள் சிக்குண்டு 11 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ். உடுவில் – கற்பமுனை பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த சிறுவனின் தந்தை வீட்டிலிருந்து உழவு இயந்திரத்தப் பின்பக்கமாக வெளியே எடுக்க முயன்றபோது அங்கு விளையாடிக் கொண்டிருந்த மேற்படி சிறுவன் உழவு இயந்திரத்தினுள் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா பாடசாலையில் கல்வி கற்கும் நிகால்தாசன் ஆத்வீகன் வயது 11 என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்



கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருளுக்கான கட்டளைகளை இடாதிருப்பதற்கு மேற்கொண்ட தீர்மானம் தற்காலிகமாக கைவிடப்படுகிறது




எரிபொருளுக்கான கட்டளைகளை இடாதிருப்பதற்கு மேற்கொண்ட தீர்மானத்தைத் தற்காலிகமாகக் கைவிடவுள்ளதாக எரிபொருள் விநியோகத்தர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இன்று கனியவள கூட்டுத்தாபனத்தின் தலைவருடன் கலந்துரையாடலொன்றை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளமையினால் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அந்த சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தினருடன் பிறிட்டோ பெர்னாண்டோ கலந்துரையாடல்





மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பிறிட்டோ பெர்னாண்டோ யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் நேற்றைய தினம் திங்கள் கிழமை கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

“வல்வெட்டித்துறை“ ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்” அறிக்கை வெளியீட்டு நிகழ்விற்காக வடமராட்சிக்கு விஜம் மேற்கொண்டிருந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பிறிட்டோ பெர்னாண்டோ அவர்கள் வலிந்து காணமல் ஆக்கப்பட்டோரது விவகாரம் உள்ளிட்ட நீதிகோரும் விடயங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் பிரத்தியேக கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

பருத்தித்துறையில் அமைந்துள்ள யாழ் வடமராட்சி ஊடக இல்ல அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை 10.30 மணி முதல் 1.00 மணி வரை இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் வடமராட்சி ஊடக இல்லத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள், பாதிக்கப்பட்ட தரப்பின் பிரதிநிதிகள் சிலர் உள்ளிட்டோர் பங்கேற்று கலந்துரையாடியிருந்தனர். இதன்போது மனித உரிமைகள் மற்றும் சமூக செயற்பாட்டாளரான நிலஷனியும் பங்கேற்றிருந்தார்.

# வீதி ஓர மரக்கறி வியாபாரிகளுக்கிடையில் மட்டு.அரசடியில் மோதல்; ஒருவர் மரணம்

## நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்












(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகாமையில் ஹோட்டல் ஒன்றிற்கு முன்னால் வீதி ஓரத்தில் பட்டா ரக வாகனத்தில் மரக்கறி வியாபாரம் செய்வோருக்கிடையே வியாபாரத்தில் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தையடுத்து இடம்பெற்ற சண்டையில் வர்த்தகர் ஒருவர் மீது கத்தி மற்றும் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் அவர் உயிரிழந்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் என்ற சந்தேகத்தில் 4 பேரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 31 வயதுடைய வர்த்தகரான டிலக்ஷன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதுபற்றி தெரியவருவதாவது:-

மட்டக்களப்பு அரசடி பகுதிக்கும் கல்லடி பாலத்துக்கும் இடையிலுள்ள வீதி ஓரத்தில் பட்டா ரக வாகனங்களில் மரக்கறிகளை கொண்டுவந்து வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவது வழமை.

நேற்று இரவு சுமார் 7.00 மணியளவில் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சகோதரரான வியாபாரி தனது பட்டா ரக வாகனதை நிறுத்தி வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இந்த நிலையில் அந்த வாகனத்துக்கு அருகாமையில் இன்னொரு வர்த்தகர் தனது வாகனத்தை நிறுத்தி வியாபாரம் செய்த நிலையில் இருவருக்கும் இடையே வர்த்தகப் போட்டி காரணமாக வாய்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவத்தில் உயிரிழந்தவரின் சகோதரர் உயிரிழந்த அண்ணாவுக்கு கையடக்க தொலைபேசி ஊடாக அழைப்பு விடுத்து வரவழைத்தார். அவர் அங்கு வந்து சகோதரனுடன் வாய்தர்கத்தில் ஈடுபட்ட வர்த்தகர் மீது தாக்குல் மேற்கொண்டமையை அடுத்து அங்கு இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. அவர் மீது 4 பேர் கத்தி மற்றும் கூரிய ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொண்டனர் எனக் கூறப்பட்டது. அவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இதனிடையே தாக்குதலை மேற்கொண்டு அங்கிருந்து தப்பி ஓடிய கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு வர்த்தகர்களும் பொலிஸாரிடம் பின்னர் சரணடைந்தமையை அடுத்து அவர்களைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸெ தெரிவித்தனர்.

சம்பவஇடத்துக்குதடவியல்பிரிவுபொலிஸார்வரவழைக்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பெரும் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்லால் கொடூரமாகத் தாக்கி மூதாட்டி ஒருவர் படுகொலை!




கல்லால் கொடூரமாகத் தாக்கப்பட்டு மூதாட்டி ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை – திவுல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த மேற்படி மூதாட்டி, கேகாலை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில்,நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கேகாலை – திவுல பிரதேசத்தைச் சேர்ந்த 80 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காணித் தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பண்டிகை காலத்தில் தட்டுப்பாடின்றி பொருள்களை விநியோகிக்க நடவடிக்கை

பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடு இன்றி அத்தியாவசிய பொருட்களை விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க இந்த தகவலை தெரிவித்தார்.

வர்த்தகத்தரப்புடன் கலந்துரையாடி குறைந்த விலையில் பொருள்களை விற்பனை செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# நுவரெலியாவில் புலி மரணம்



**(மஸ்கெலியா நிருபர்)**

நுவரெலியாவில் 2023ஆம் ஆண்டிற்குப் பின்னர் புலியொன்று உயிரிழந்துள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நுவரெலியா, நானுஓயா, பாம்ஸ்டன் தோட்டத்தில் கடந்த வியாழனன்று புலி ஒன்றின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

நுவரெலியா வனவிலங்கு தளத்தில் 2023 ஆம் ஆண்டுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட முதல் புலி மரணம் இதுவென வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மேலும் மற்றுமொரு விலங்குடன் ஏற்பட்ட மோதலின் காரணமாக இந்த விலங்கு இறந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

உயிரிழந்த விலங்கு 1-2 வயதுக்கு இடைப்பட்ட பெண் என்பதால் நுவரெலியா வனஜீவராசிகள் அலுவலகம் விசாரணைகளை மேற்கொண்டு நுவரெலியா நீதிமன்றில் உண்மைகளை தெரிவித்ததையடுத்து, புலியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக ரன்தெனிகல கால்நடை மருத்துவப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டது.

மனித நடமாட்டத்தால் மலைப்புலிகள் பலியாகியுள்ள போதிலும், நுவரெலியா வனவிலங்கு தளத்தில் மலைப்புலிகள் குறித்த விழிப்புணர்வு காரணமாக மலைப்புலிகள் இறப்பது குறைந்துள்ளதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உண்டு. ஆயினும் இன்னும் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூடி, நியமனக் குழுவை தெரிவு செய்யவில்லை. அடுத்த பதிமூன்று நாள்களில் வேட்பு மனு தாக்கல் தொடங்கி விடும். மொத்தம் மூன்றரை நாள்கள்தான் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான காலக்கெடு. அதற்கிடையில் மத்திய குழுவைக் கூட்டி, நியமனக் குழுவை தெரிவு செய்து, வேட்பாளர்களையும் தீர்மானிக்க வேண்டும்.

இனித்தான் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூடி வேட்பாளர் நியமனக் குழுவை தெரிவு செய்ய வேண்டும்.

ஏற்கனவே கட்சியின் மத்திய குழுவை வரும் ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் கூட்டுவதற்கான அழைப்பைக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் உறுப்பினர்களுக்கு அறிவித்திருந்தார். ஆனால், மத்திய குழுவில் இடம் பெற்றிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் வரவு – செலவு திட்ட விவாதத்திற்காக கொழும்பில் தங்கி இருப்பதால், இடையில் ஒன்பதாம் திகதி வவுனியாவுக்கு வந்து, திரும்ப முடியாது என்று குறைபட்டுக் கொண்டனர் எனத் தெரிகின்றது. அதனை அடுத்து ஒன்பதாம் திகதி மத்திய குழு கூட்டம் என்று கொடுக்கப்பட்ட அழைப்பு இரத்தாகின்றது என்ற கடிதம் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டது.

ஆனால் இப்போது 17ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதிக்கு இடையில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்து முடிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால், வேட்பாளர் நியமனக் குழுவை தெரிவு செய்வதற்காக ஒன்பதாம் திகதி ரத்து செய்யப்பட்ட மத்திய குழு கூட்டத்தை கட்டாயம் நடத்த வேண்டிய நெருக்கடி கட்சிக்கு நேர்ந்துள்ளது. அதனால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, பின்னர் ரத்து செய்யப்பட்ட கூட்டம், திட்டமிட்டபடி அத்திகதியில் நடைபெறும் என்ற மூன்றாவது அறிவித்தல் இப்போது உறுப்பினர்களுக்கு செல்வதாகத் தெரிகிறது.

இது தேர்தல் ஆயத்தம் தொடர்பில் நமது கட்சிகளின் தயார் நிலை பற்றிய ஒரு ஸாம்பிள் தகவல்தான்.

இன்னும்பலதிருக்கூத்துகள் இருக்கின்றன. பொறுத்திருங்கள் பார்க்கலாம்.

\+ + +

இதன் கீழ் நான் தருகின்ற விடயம் என்னுடைய சொந்தச் சரக்கு அல்ல. முகப்புத்தகத்தில் 'இனம் ஒன்றின் குரல்' என்ற பெயரில் உள்ள கணக்கில் வெளியான ஒரு தகவலை அப்படியே சுட்டு வாசகர்களின் கவனத்திற்குத் தருகிறேன். அந்தத் தகவலில் காத்திரமான விடயங்கள் கவனத்திற்குரியவனாக இருக்கின்றன என்று நினைக்கிறேன். இனி அந்த விடயத்துக்குள் நுழையலாம்:–

பத்திரிகையாளர் கீத் நொயர் மீதான தாக்குதல் தொடர்பில் நேற்றுக் கைது செய்யப்பட்ட இராணுவ புலனாய்வாளர்கள் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ரூபா 3.5 பில்லியன் வற் வரி மோசடிக்காக சிறை தண்டனை அனுபவித்து வந்த அர்ஜுன் அலோசியஸ் நன்நடத்தை (?) காரணமாக வெறும் 4 மாத காலத்தில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

இஸ்லாத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமைக்காகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் பிணையில் விடுவிக்கப்பட்டு உள்ளார்.

ரூபா 34 மில்லியன் பெறுமதியான நிலமொன்று தொடர்பாக பணச் சலவைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட யோஷித்த ராஜபக்ஷ வெறும் இரு நாள்களில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ரூபா 6.1 மில்லியன் பொது நிதியை தவறாகப் பயன்படுத்தினார் எனக் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா வெறும் ஒரு நாளில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சட்டவிரோதமாக ஒன்றிணைக்கப்பட்ட வாகனம் ஒன்று தொடர்பாகக் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா வெறும் ஒரு நாளில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ரூபா 183 மில்லியன் மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே கைது செய்யப்பட்ட அன்றே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நிதி மோசடி வழக்கொன்றில் சிக்கிய முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் வெறும் இரு வார காலத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வாகன மோசடி வழக்கிற்காக கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஒரு வார காலத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மறுபுறம் VFS Scam உட்பட பல்வேறு அரச நிதி மோசடிகளோடு நேரடியாக தொடர்புடைய முன்னாள் அமைச்சர் டிரான் அலஸுக்கு விசேட அதிரடிப் படைப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

டிரான் அலஸின் நெருக்கிய சகாவான திருமதி ஆயிஷா ஜினசேனா நீதி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதே போல டிரான் அலஸின் மற்றுமொருகூட்டாளிதேசியபொலிஸ்ஆணைக் குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இது போதாதென்று தற்போது நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தேடப்படும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் டிரான் அலஸின் வீட்டில் பதுங்கியிருக்கின்றார் எனச் சொல்லப்படுகின்றது.

இதனாலேயே இலங்கைஒ பொலிஸாரால் அவர்களது கட்டமைப்பின் பிரதானி தேசபந்து தென்னகோனைக் கண்டுபிடிக்க முடியவில்லை(?).

நாளை(இன்று) தேசபந்து தென்னகோன் நீதிமன்றில் சரணடைந்து பிணை பெறும் வரை அவர் டிரான் அலஸ் வீட்டில் பதுங்கி இருப்பார் எனச் சொல்லுகின்றார்கள்.

சம நேரத்தில் ஜே.வி.பியின்பிரதான நன்கொடையளாரான இலங்கை கிரிக்கெட்டை (Sri Lanka Cricket) சீரழித்த மோசடிப் பேர்வழி ஷமி சில்வாவும் தொடர்ந்து பாதுக்கப்பட்டு வருகின்றார்.

இங்கே ஷமி சில்வா முதல் டிரான் அலஸ் வரை மோசடிப் பேர்வழிகளைப் பாதுகாத்து கொண்டு, ஜே.வி.பி. தொடர்ந்தும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக வெறும் வாயில் பேசி வருகின்றது.

அதேநேரம்பிணைஅடிப்படைஉரிமை என்பது புரிந்து கொள்ளக் கூடியது. குறிப்பாக குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபர் விசாரணை முடிவடையும் வரை சிறையில் இருக்க வேண்டிய அவசியமில்லை.

அதாவது குற்றம்சாட்டப்படுபவர் கோரும் பிணை ஒருநாள் தாமதிக்கப்பட்டாலும், அது அவரது அடிப்படை உரிமையைப் பாதிக்கக்கூடியது என்பதை மறுக்க முடியாது.

ஆனால் பாரதூரமான நிதி மோசடிகளில் ஈடுபட்ட சக்திமிக்க நபர்கள் வெறும் ஒரு சில நாள்களில் மிக மிக வேகமாகப் பிணை பெற்று கொள்ளுவது மலைப்பாக உள்ளது.

அநுர குமார திஸநாயக்க தன் முதலாவது பிரசார கூட்டத்தில் அர்ஜுன் அலோசியஸ் மோசடி செய்த ரூபா 3.5 பில்லியனை மீள திறைசேரிக்கு பெற்று கொடுப்பார் எனச் சவால் விட்டிருந்தார்.

ஆனால் அர்ஜுன் அலோசியஸ் வெறும் 4 மாதத்தில் சிறையிலிருந்து விடுவிக்கப்படும் அதிசயம் நடக்கின்றது.

இது போதாதென்று ஆள்கடத்தல் மற்றும் மோசமான தாக்குதலில் ஈடுபட்ட இராணுவ புலனாய்வாளர்களுக்கு வெறும் ஒரே நாளில் பிணை வழங்கப்படுகின்ற உலக சாதனையெல்லாம் நடந்தேறுகின்றது.

ஆனால், இந்த நாட்டில் பல ஆண்டுக் கணக்கில் தமிழ் அரசியல் கைதிகள் எந்த விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

விசேடமாக பிணையற்ற சந்தேக நபர்களாகப் பலர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால் இனவாதம் மற்றும் அடிப்படைவாதம் ஆகியவற்றுக்கு இடமில்லை என வாதிடும் ஜே.வி.பி. தமிழ் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை எனச் சொல்லுகின்றது.

கொடுமை இது...!

– இப்படி அந்த முகப்புத்தகத் தகவல் தெரிவிக்கின்றது.

---

## ஒட்டுக்குழுக்களோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தப் பேட்டியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நாங்கள் ஒருபோதும் தமிழர்களின் உரிமைகளையும் தேசியத்தையும் விட்டுக்கொடுக்கமாட்டோம். தலைவர் பிரபாகரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியபோது அதில் ஒட்டுக்குழுக்களை இணைப்பதில் தயக்கம் காட்டியிருந்தார். இருப்பினும் அந்தச் சமயத்தில் தம் தவறை உணர்ந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ ஆகிய கட்சிகளை மட்டுமே கூட்டமைப்புக்குள் புலிகள் இணைத்தனர்.

2009 க்குப் பின்னர்தான் புளொட் கூட்டமைப்பில் இணைந்தது. புலிகள் இருந்திருந்தால் ஒருபோதும் புளொட் கூட்டமைப்புக்குள் வந்திருக்க முடியாது. இப்போது புளொட்டும், மண்டையன் குழுவும் தாங்கள் இப்போதும் ஒட்டுக்குழுக்கள்தான் என்பதை உறுதிப்படுத்தியுள்ளன. எம்மைப் போன்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சு நடத்தியவாறு பின்கதவால், ஈ.பி.டி.பியில் இருந்து பிரிந்து சென்று, போர்க்குற்றவாளி மஹிந்தவை நியாயப்படுத்திய சந்திரகுமாரின் கட்சி, சிறிரெலோ போன்ற மக்கள் விரோத சக்திகளை இந்தக் கூட்டுக்குள் இணைத்துள்ளனர். இப்படி மக்களின் இரத்ததைக் குடித்தவர்கள் இருக்கும் கூட்டணியில் நாம் இணைய முடியாது. அதனால் இந்த ஒட்டுக்குழுக்களோடு இணையாமல் தனித்தே உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்குவோம். இளைஞர்கள் எங்கள் பின்னால் வரத் தயாராக இருக்கின்றனர்." – என்றார்.

## சுகாதார ஊழியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலக் கொடுப்பனவு குறைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளைமறுதினம் வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் 24 மணி நேர அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மேற்படி தொழிற்சங்க நடவடிக்கைத் தொடர்பில் சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு வழங்கியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"புதிய அரசின் 2025 ஆம் ஆண்டுக்கான கன்னி வரவு – செலவுத் திட்டத்தில் சுகாதார ஊழியர்களின் 1/20, 1/60 ஆகிய கொடுப்பனவு குறைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

புதிய வரவு – செலவுத் திட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், கடந்த மாதம் 24 ஆம் திகதி சுகாதார ஊழியர்களுக்கான சலுகைகள், மேலதிக சேவைகாலக் கொடுப்பனவு குறைக்கப்பட்டமை தொடர்பில் சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் கலந்துரையாடியிருந்தோம்.

இதன்போது சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் நியாயமற்ற முறையில் குறைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் சுகாதார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தோம்.

அன்று இப்பிரச்சினைக்குப் பொறிமுறை ரீதியிலான தீர்வைக் காண்பது அவசியம் எனவும், அதற்கு ஒருவார கால அவகாசம் வழங்குமாறும் சுகாதார அமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும், ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் அரசு அதற்கான தீர்வைக் கண்டறிந்திருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

அதை அறிந்துகொள்வதற்குச் சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு ஆர்வமாக உள்ளது. ஆகையால் செவ்வாய்க்கிழமை (இன்று) அல்லது புதன்கிழமை (நாளை) அதற்குரிய எழுத்து மூலமான உத்தியோகபூர்வ அறிவிப்பு அரசால் வெளியிடப்பட வேண்டும். இல்லையேல் எதிர்வரும் 6ஆம் திகதி (நாளைமறுதினம்) நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் பணிபுரியும் சுகாதார ஊழியர்கள் காலை 8 மணி முதல் 24 மணி நேர அடையாளப் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கத் தயாராகவுள்ளோம்.

இதேவேளை, நிறைவுகாண் மருத்துவத் தொழில் வல்லுநர்கள் ஒன்றியம், அரச மருத்துவவியல் பரிசோதகர்கள் சங்கம், அரச கதிரியல் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம், அரச பற்சிகிச்சை தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம், அரச குடும்ப நல உத்தியோகத்தர் சங்கம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் உள்ளடங்கலாக சுமார் 18 சங்கங்கள் இணைந்து மேற்படி தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது." – என்றுள்ளது.

இதேவேளை, தற்போதைய அரசுக்கு எதிராக எவ்வித தொழிற்சங்க நடவடிக்கையிலும் ஈடுபடப் போவதில்லை என்று அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் மதிவத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"அரசின் கன்னி வரவு – செலவுத் திட்டத்தில் அனைத்து அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனினும், சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் குறைக்கப்பட்டுள்ளதாத் தெரிவித்துக் கொண்டு ஒரு சில குழுவினர் அரசுக்கு எதிராகச் செயற்படுகின்றனர். முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகச் செயற்படும் தரப்பினரே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

பெரும் சிரமத்துக்கு மத்தியில் தற்போதைய அரசை இந்த நாட்டு மக்கள் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்குக் கொண்டு வந்துள்ளனர். மக்களின் ஆணைக்கு எதிராகச் செயற்பட வேண்டிய தேவை எமக்கில்லை. அரசு ஆட்சிக்கு வந்து 3 மாதங்களே கடந்துள்ளன. கொடுப்பனவுகளைக் குறைத்துள்ளதாகச் சாடுகின்றனர்.

இந்தக் குறுகிய காலப்பகுதியில் அரசுக்கு எங்கிருந்து நிதி கிடைக்கும் என்பது தொடர்பில் எவரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. எவ்வாறாயினும் தற்போதைய அரசுக்கு எதிராக அகில இலங்கை தாதியர் சங்கம் ஒருபோதும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றேன்." – என்றார்.

---

## முதலமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது "எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுகிறீர்களா?" – என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக இருந்தால் தேர்தல் திருத்தம் முதலில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் தனிநபர் பிரேரணைகூட கொண்டுவரப்பட்டிருந்தது. ஆனால் 50 வீதம் தொகுதி மற்றும் விகிதாசார முறைக்கு தென்னிலங்கையிலும் கடும் எதிர்ப்பு வலுத்தது. நாங்களும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தோம்.

இவ்வாறான இழுபறியில் மாகாண சபைத் தேர்தல் நடந்தால் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக நிற்பதற்கு நான் தயாரில்லை.

எமது கட்சி தற்போது வழக்கில் உள்ளது. கட்சியில் உள்ளவர்களே வழக்கைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

தாயை நீதிமன்றத்தில் வைத்துக் கொண்டு தாயிடம் உணவு கேட்பது போல் எமதுகட்சிகாணப்படுகின்றது. அதாவதுகட்சியை வழக்கிலே வைத்துக் கொண்டு – பெற்ற தாயை நீதிமன்றத்தில் நிறுத்தி வைத்துக் கொண்டு நாங்கள் அம்மாவிடம் உணவு கேட்கப் போகின்றோம், அம்மாவிடம் பால் அருந்தப் போகின்றோம் என்று சொல்லிக்கொள்வது அல்லது பதவிகளுக்காக நாங்கள் அடிபடுவது அல்லதுபதவிகளுக்காகத்தான்நாங்கள்பேசிக் கொண்டிருப்பது ஓர் இன விடுதலைக்கான அரசியல் அல்ல.

நாங்கள் செய்வது ஒரு தேச விடுதலைக்கான அரசியல்தான் என்பது எல்லோருக்குமே தெரியும். தமிழினம் இத்தனை ஆண்டுகளாக – தன்னுடைய விடுதலைக்காகத் தந்தை செல்வா, தலைவர் பிரபாகரன் எனத் தொடர்ந்து போராடிக் கோண்டிருக்கின்ற ஓர் இனம்.

இது பதவிகளுக்குப் பேரம் பேசுகின்ற காலம் இல்லை. ஆகவே, பதவிகளை முக்கியத்துவப்படுத்தி அரசியல் செய்வதை முதலில் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அவருக்கு என்ன பதவி கொடுக்கலாம், இவர் என்ன பதவிக்கு வரலாம் என்ற இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

இன்று எங்களிடம் இருக்கின்ற சில இளைஞர்கள் பதவிகளுக்காக அதாவது இன்ன, இன்ன பதவி கிடைக்கும் எனக் கருதி இதற்காகக் கட்சிகளில் சேர்ந்து கொள்ளலாமா என்கின்ற எண்ணங்களைக் கூட கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், பல இளைஞர்கள் கொள்கைகளுக்காகத் தமிழ்த் தேசிய விடுதலைக்காகத் தங்களை இதற்குள் முழுமையாக அர்ப்பணித்திருக்கிறார்கள்.

இவ்வாறான சூழல் இருக்கும்போது முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடும் எண்ணம் எனக்கு இல்லை.

அத்தகைய எண்ணங்களை நான் கொண்டிருக்கவும் இல்லை. அவ்வாறான ஒரு போட்டிக் களத்துக்குள் இப்போது இறங்கிக்கொள்ளவும்

தயாராக இல்லை என்பதை மிகத் தெளிவாக நான் சொல்லி வைக்க விரும்புகின்றேன்." – என்றார்.

---

## நாடளாவிய ரீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற செயற்குழு அவசர கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதியுடனான கலந்துரையாடல் நிறைவடைந்து 4 நாட்கள் கடந்துள்ள நிலையில் எவ்விதமான சாதகமான தீர்வுகளும் கிடைக்கவில்லை. தொடர்ந்தும் அரசு தீர்வுகளை வழங்காத நிலையில் எதிர்வரும் 5 ஆம் திகதி (நாளை) நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது." – என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசமைப்பும் குழுக்களும்

நாடாளுமன்ற மட்டத்தில் அரசமைப்புத் தொடர்பாக நியமிக்கப்படுகின்ற குழுக்கள் தொடர்பில் தமிழ் வாசகர்கள், வாக்காளர்கள் மத்தியில் ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கின்றமையை ஒட்டி, அதைப் பற்றிய விடயத்தைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் அரசமைப்பு விவகாரங்களிலும் நாடாளுமன்ற விடயங்களிலும் முதிர்ச்சி பெற்ற ஜனாதிபதி சட்டத்தரணி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

அரசமைப்பு விடயங்களை ஒட்டி இப்போது பேசப்படுகின்ற அம்சங்களில் மூன்று விவகாரங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றமையை அவர் விளக்கியிருக்கிறார்.

முதலாவது விடயம் - நாட்டின் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அரசமைப்பு கவுன்ஸில் பற்றியது. இது அரசமைப்பின் 17 வது திருத்தத்தில் கொண்டுவரப்பட்டு, 18ஆவது திருத்தத்தில் நீக்கப்பட்டு, 19ஆவது திருத்தத்தில் மீளக் கொண்டுவரப்பட்டு, இருபதாவது திருத்தத்தில் நீக்கப்பட்டு, 21 ஆவது திருத்தத்தில் மீண்டும் கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்ற சரித்திரத்தை அவர் சுருக்கமாக எடுத்துரைக்கின்றார்.

அதில் பத்து உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அந்த அரசமைப்பு கவுன்ஸில் குறித்து அரசமைப்பில் தெளிவாக இருக்கின்றது. அந்தப் பத்து உறுப்பினர்களும் யார் என்பதும் அரசமைப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதில் ஒருவர் பிரதான எதிர்க்கட்சி அல்லாத ஏனைய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதி. அந்த வகையில்தான் சிறிதரன் எம்.பி. அந்த இடத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். அவர் அரசமைப்பு கவுன்ஸிலின் ஓர் உறுப்பினர். நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சி அல்லாத ஏனைய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் அவரைத் தேர்வு செய்து அந்த குழுவுக்கு அனுப்பி உள்ளனர்.

பிரதம நீதியரசர் உட்பட உயர்நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் போன்ற உயர் நியமனங்களுக்கு அங்கீகாரம் வழங்குவது, சுயாதீன ஆணைக் குழுக்களுக்கு உரியவர்களை ஜனாதிபதிக்குப் பரிந்துரைப்பது போன்ற விசேடமான அதிகாரங்கள் இந்தப் பத்து உறுப்பினர் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு உண்டு.

இந்தக் குழுவுக்கும் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

இன்னொரு குழு - இப்போது சபாநாயகரால் நியமிக்கப்பட்டிருக்கிறது. அது அரசமைப்பின் கீழான நியமனம் அல்ல. நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளின் கீழான ஒரு நியமனம். நாடாளுமன்ற நிலையியல் குழுக்களில் ஒன்று. அரசமைப்புத் தொடர்பாக நாடாளுமன்றத்தில் தேவை வரும் போது தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக சபாநாயகர் நியமிக்கும் குழு. அதில் ஐவர் இடம் பெறுவர். அந்த ஐவரில் ஒருவராக இந்தத் தடவை மருத்துவர் சத்தியலிங்கம் எம்.பியை சபாநாயகர் நியமித்துள்ளார். அந்தக் குழுவுக்கும் அரசமைப்பு உருவாக்கத்திற்கும் அல்லது அரசமைப்பு கவுன்ஸிலுக்கும் தொடர்பில்லை. இந்தக் குழு பிரத்தியேகமாக சபாநாயகர் கோரும் சமயங்களில் அவருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அவரால் நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருந்து நியமனம் செய்யப்படும் குழு. அந்த நியமன அதிகாரம் சபாநாயகருக்கே உண்டு.

அடுத்தது - புதிய அரசமைப்பு உருவாக்க தொடர்பான கட்டமைப்புகள். புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றிப் பேசும் தற்போதைய அரசு அதை எவ்வாறு செய்யப்போகின்றது என்பது குறித்து எந்த வெளிப்படுத்தலையும் இன்னும் செய்யவில்லை. அதற்காக நாடாளுமன்றக் குழு ஒன்றை நியமிப்பதா அல்லது வெளியில் ஒரு குழுவை நியமிப்பதா அல்லது 2015 - 2019 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டமை போன்று முழு நாடாளுமன்றமுமே அரசமைப்பு (உருவாக்கப்) பேரவையாக மாறுவதா என்பது பற்றிய தெளிவுபடுத்தல் எதுவும் இன்னும் அரசு பக்கத்தில் இருந்து வரவில்லை.

இந்த வெவ்வேறு குழுக்களின் பெயர்களிலே 'அரசமைப்பு' என்ற சொல் இருப்பதால் மக்கள் மத்தியில் ஒரு குழப்பம் ஏற்பட்டிருப்பதாக சுமந்திரன் சுட்டிக் காட்டுகிறார். ஆக, இந்த குழுக்களின் வேறுபாடுகளை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதை மக்களுக்கு தெளிவுபடுத்தக்கூடிய ஒரு சட்ட விற்பனராக சுமந்திரன் இருக்கின்றார். ஆனால் அவர் நாடாளுமன்றத்தில் இம்முறை இல்லை.

அவர் குறிப்பிடுகின்றமை போல இந்தப் பல்வேறு குழுக்கள் தொடர்பில் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் குழப்பமான நிலைப்பாடு இருப்பது அண்மைக்காலத்தில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களில் இருந்து தெளிவாகின்றது. இது தமிழர்களின் துரதிஷ்டம்.

# தீர்வு இல்லா விட்டால் தீக்குளிப்பு போராட்டம்

## தமிழக மீனவர்கள் எச்சரிக்கை






இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், மீன்பிடிப்படகுகளையும் உடனடியாக விடுவிக்குமாறு கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர்ந்தும் நான்காவது நாளாக நேற்றும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தங்கச்சி மடம் வலசை பகுதியில் உள்ள பஸ் தரிப்பிடத்திற்க முன்னால் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

தொடர்ச்சியாக நேற்று முன்தினம் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கொட்டும் மழையையும் பொருள் படுத்தாமல் தொடர் போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களுக்கு அபராதம் விதித்தும் அவர்களை கண்டுக்கொள்ளாத மத்திய அரசை எதிர்த்தே இந்த போராட்டத்தை முன்னெடுத்தது வருவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் தீக்குளிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன

# இஸ்ரேலுக்குள் நுழைந்த இந்தியர் சுட்டுக்கொலை



இஸ்ரேலிய எல்லைக்குள் சட்ட விரோதமாக நுழைய முயன்றதாக கூறி இந்தியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்ட இந்தியர் ஜோர்டான் வழியாக இஸ்ரேலுக்குள் நுழைய முயன்ற போது ஜோர்டானிய பாதுகாப்பு படையினர் அவரை சுட்டுக் கொன்றனர் என தெரியவந்துள்ளது.

சுட்டுக்கொல்லப்பட்டவர் கேரளாவைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியரின் உடலை மீட்டு, கேரளாவிற்கு கொண்டு வரும் பணியில் ஜோர்டானிய அதிகாரிகளுடன் தீவிரமாக கலந்துரையாடப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# நடிகர் சிவாஜி கணேசனின் வீட்டை பறிமுதல் செய்ய நீதிமன்றம் உத்தரவு







மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வீட்டை பறிமுதல் செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேரனும், நடிகருமான துஷ்யந், அவரது மனைவி அபிராமி ஆகியோர் பங்குதாரர்களாக உள்ள ஈசன் தயாரிப்பு நிறுவனம் சார்பில் விஷ்ணு விஷால், நிவேதா பெத்துராஜ் ஆகியோரின் நடிப்பில் ஜகஜால கில்லாடி என்கிற படத்தைத் தயாரிப்பதற்காக கடன் வழங்கக் கோரி தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் என்கிற நிறுவனத்தை அணுகி இருந்தனர்.

அந்த பட தயாரிப்புக்காக தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடம், 3 கோடியே 74 லட்சத்து 75 ஆயிரம் ரூபா கடன் வாங்கியிருந்தனர். இந்த கடனை ஆண்டுக்கு 30 சதவீத வட்டியுடன் திருப்பிக் கொடுப்பதாக உறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் கடன் தொகையை திருப்பி தராததை அடுத்து இந்த விவகாரத்தில் தீர்வு காணும் வகையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி டி.ரவீந்திரன் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டார்.

இந்த விவகாரத்தை விசாரித்த மத்தியஸ்தர் நீதிபதி ரவீந்திரன், கடன் தொகை வட்டியுடன் சேர்த்து 9 கோடியே 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாயை வசூலிக்க ஏதுவாக, ஜகஜால கில்லாடி படத்தின் அனைத்து உரிமைகளையும், தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவன நிர்வாக இயக்குனரிடம் ஒப்படைக்கும்படி கடந்த 2024 ஆம் ஆண்டு மே 4 ஆம் திகதி உத்தரவிட்டார்.

உரிமைகளைப் பெற்று அவற்றை விற்று கடன் தொகையை ஈடு செய்யவும், மீதத்தொகையை ஈசன் தயாரிப்பு நிறுவனத்திடம் வழங்கவும் உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவின்படி படத்தின் அனைத்து உரிமைகளையும் வழங்கக் கோரிய போது, படம் முழுமையடையவில்லை எனக் கூறி பட தயாரிப்பு நிறுவனம் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால், மத்தியஸ்தர் தீர்ப்பை அமுல்படுத்தும் வகையில், ராம்குமாரின் தந்தையான சிவாஜி கணேசனின் வீட்டை பறிமுதல் செய்து, பொது ஏலம் விட உத்தரவிடக் கோரி, தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தது. அந்த மனுவில், தற்போது வரை கடன் தொகை வட்டியுடன் சேர்த்து 9 கோடியே 39 லட்சத்து 5 ஆயிரத்து 543 ரூபா வசூலிக்க வேண்டியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அப்துல் குத்தூஸ், இதுவரை பதில் மனு தாக்கல் செய்யவில்லை எனக் கூறி, நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வீட்டை பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். மேலும், இந்த உத்தரவு குறித்து தொடர்புபட்ட சார் பதிவாளருக்கு தகவல் தெரிவிக்கவும் உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை நாளை 05ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

# இந்தியாவின் திருநங்கைகளுக்கான முதல் வைத்தியசாலை மூடப்பட்டது



இந்தியாவின் திருநங்கைகளுக்கான முதல் வைத்தியசாலையை யு.எஸ்.எய்ட் நிறுவனம் மூடியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளிநாட்டு உதவிகளை நிறுத்தியதை அடுத்து, இந்தியாவின் முதல் திருநங்கைகளுக்கான வைத்தியசாலை மூன்று நகரங்களில் தனது செயற்பாடுகளை நிறுத்தியுள்ளது.

இந்தியாவின் தானே, புனே, ஹைதராபாத் ஆகிய நகரங்களில் மருத்துவ சேவையை முன்னெடுத்து வந்த இந்த வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன.

யு.எஸ்.எய்ட் நிதிகள் நிறுத்தப்பட்டிருப்பது உலகெங்கிலும் உள்ள பல்வேறு திட்டங்களையும் குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளையும் பாதித்துள்ளன.

இந்த வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளமை திருநங்கைகளின் சுகாதார தேவைகளைப் பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




# ஜேர்மனியில் பொதுமக்கள் மீது கார் மோதியதில் இருவர் பலி!

## 25 பேர் காயம்

மேற்கு ஜெர்மனியின் மன்ஹெய்ம் நகரத்தில் பொதுமக்கள் மீது கார் ஒன்று மோதியதில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 25 பேர் காயமடைந்துள்ளனர் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மன்ஹெய்ம் நகரில் இடம்பெற்ற கொண்டாட்டமொன்றின் போது, இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என அந்த நாட்டின் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தையடுத்து, நகர மையத்திலிருந்து விலகி இருக்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



விபத்து தற்செயலானது அல்லது வேண்டுமென்றே காரினால் மக்கள் மோதப்பட்டனரா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.








# 40 வருட போரை முடிவுக்கு கொண்டுவந்தது குர்திஷ்

துருக்கியுடன் நாற்பது வருடகாலமாக போரிட்ட குர்திஸ் போராளிகள் அமைப்பான PKK அமைப்பு போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

சிறையில் உள்ள அதன் தலைவர் அப்துல்லா ஒகலான் போராட்டத்தை கைவிடுமாறு வேண்டுகோள் விடுத்து இரண்டு நாட்களின் பின்னர் அந்த அமைப்பு போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக PKK அமைப்பிற்கு நெருக்கமான பிராட் செய்தி நிறுவனம் அமைப்பு போர் நிறுத்த அறிவிப்பை முதலில் வெளியிட்டுள்ளது.

1999 முதல் துருக்கியின் சிறையில் உள்ள PKK அமைப்பின் தலைவரை மேற்கோள்காட்டி “இந்த போர் நிறுத்த அறிவிப்பு குறித்து செய்தி வெளியிட்டுள்ள பிராட் செய்தி நிறுவனம் சமாதான ஜனநாயக சமூகத்தினை ஏற்படுத்துவதற்காக PKK தலைவர் விடுத்த வேண்டுகோளை ஏற்று போர் நிறுத்தத்தை அறிவிப்பதாக PKK அமைப்பு தெரிவித்துள்ளது” எனக் குறிப்பிட்டுள்ளது.

# மூன்று தசாப்தங்களின் பின்னர் ஜப்பானில் மிகப்பெரிய காட்டுத் தீ!







மூன்று தசாப்தங்களின் பின்னர் ஜப்பானில் மிகப்பெரிய காட்டுத் தீ ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை முதல் வடக்கு ஜப்பானிய நகரமான ஒஃபுனாடோவைச் சுற்றி 5,200 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.

இந்த தீப்பரவலில் இதுவரை ஒருவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

தொடர் தீப்பரவலினால் 4,600 பேர் அந்தப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதுவரை 80 கட்டடங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளன.

டோக்கியோ உட்பட 14 மாகாணங்களில் இருந்து ஆயிரக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# மட்டக்களப்பு மார்க்க ரயில் சேவை நேர அட்டவணையில் திருத்தம்




மட்டக்களப்பு மார்க்கத்தினூடான ரயில் சேவை நேர அட்டவணையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காட்டு யானைகள் ரயிலில் மோதி விபத்திற்குள்ளாவதை தவிர்த்துக்கொள்ளும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இரவு நேரத்தில் பயணிக்கும் ரயில்களில் காட்டு யானைகள் மோதி விபத்திற்குள்ளாவதை தவிர்ப்பதற்கு மேலதிமாக வேகக்கட்டுப்பாட்டு நடைமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்காக நீண்ட மற்றும் குறுகிய கால திட்டங்களை வகுத்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2025 மார்ச் 7ஆம் திகதி முதல் இந்த திருத்தங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன.














# கலைக்கண்காட்சியும், வலுவூட்டல் நிகழ்வும்

(பா.சதீசன்)

இலங்கை அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய தொழில் முயற்சியாளர்களுக்கான வலுவூட்டல் நிகழ்வும்,

ஓவியம் சார் கண்காட்சியும் யாழ்ப்பாணம் ஆண்கள் இந்துக்கல்லூரியில் இடம்பெற்றிருந்தது.

புதியவாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஜேர்மன் தூதரகம் ஊடாக டாறா (Tara) நிறுவனம் இணைந்து

இலங்கையில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் கலைசார்ந்த படைப்புக்களை செய்து வரும் தொழில் முயற்சியாளர்களுக்கான வலுவூட்டல் நிகழ்வும், கலைக்கண்காட்சியும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆண்கள் இந்துக்கல்லூரியில் இடம்பெற்றிருந்தது.

சோமஸ்கந்தா கல்லூரி அதிபரும், புதியவாழ்வு நிறுவனத்தின் பொருளாளருமான சி.திரிகரன் தலைமையில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் ஜேர்மன் தூதரகம் ஊடாக வருகைதந்த

டாறா (Tara) நிறுவனத்தினருக்கும் இலங்கையில் இருந்து கலைக்கண்காட்சியில் கலந்துகொண்ட 15 சுயதொழில் செய்பவர்களுக்குமான கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இந்த கலந்துரையாடலில் ஜேர்மன் நாட்டினுடைய கைவினை பொருள்கள், ஜேர்மன் நாட்டின் தேவைகள் எவ்வாறு இருக்கின்றன, எவ்வாறான பொருட்கள் ஜேர்மன் நாட்டிற்கு தேவைப்படுகின்றது என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

அதனைதொடர்ந்து எமது உள்ளூர் உற்பத்தியாளர்களின் கலைப் பொருட்களை பார்வையிட்டு, எமது உள்ளூர் உற்பத்தியாளர்களின் தரம், உற்பத்தி பொருள்களின் வெளியீடு (Output) எவ்வாறு இருக்க வேண்டும், சந்தைப்படுத்துவதற்கான. வழிவகைகளையும் கூறி ஜேர்மன் டாறா (Tara) நிறுவனத்தினர் பர்வையிட்டிருந்தனர்.

அத்தோடு எமது உள்ளூர் உற்பத்தி பொருட்களை ஜேர்மன் நாட்டிற்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாக இரண்டாம் கட்ட கலந்துரையாடலின் போது நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்திருந்தனர்.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பிரதி அதிபர்களான இந்திரபாலா, பரணிதரன், ஜேர்மன் வுயசய நிறுவன கபிலன், மார்டின், ஜெசீலா யாழ் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியரும் புதிய வாழ்வு நிறுவனத்தின் ஆலோசகருமான வேல்நம்பி, புதிய வாழ்வு நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவரான செல்வி துரைச்சாமி திலகவதி, திட்ட இணைப்பாளர் சு.விஜயலாதன், சுயதொழில் முயற்சியாளர்கள்,புதியவாழ்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.








# வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடம் நிலைமைய விளக்கி தற்போதைய பணிப்பாளர் அறிக்கை

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடத்திற்கு தகுதியானவர்கள் அனைவரும் விண்ணப்பித்திருக்கவில்லை என்பதுடன் மேற்படி நிலைமைக்கு இப்போதுள்ள மேலிடத்தின் முறையற்ற அழுத்தங்களே காரணமாக அமைந்திருந்தது என்ற சாரப்பட "காலை முரசு" நாளிதழில் வெளியான செய்தி தொடர்பில் சில தெளிவுபடுத்தல்களை சமர்ப்பிப்பது அவசியமெனக் கருதுகிறேன்.

– இவ்வாறு தேரிவித்து வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.ஜெ.பிறட்லி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

"வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடத்திற்கு இருவர் மட்டுமே விண்ணப்பம்" என்ற தலைப்பில் நேற்று முன்தினம் வெளியான செய்தி குறித்தே இந்தக் கடிதத்தை அவர் அனுப்பி வைத்துள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:–

வெற்றிடமான பதவியொன்றிற்கு விண்ணப்பம் கோரப்படும் போது ஒருவர் விண்ணப்பிப்பது அல்லது விண்ணப்பிக்காதிருப்பது அவருடைய தனிப்பட்ட தீர்மானமாகும். இருப்பினும் அவர் அந்தத் தீர்மானத்தை மேற்கொள்ளும் போது அப்பதவியின் முக்கியத்துவம் பொறுப்புக்கள் தொடர்புடைய சூழ்நிலைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே தீர்மானித்திருப்பார் என்பது வெளிப்படையான உண்மையே.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி என்பது மாகாணக் கல்வி நிர்வாகத்தில் அதிக தாக்கத்தை செலுத்தக்கூடிய முக்கியமான பதவியாகும். மாகாணக் கல்வித் திணைக்களம் மத்திய மற்றும் மாகாண கல்விக் கொள்கைகளை அமுலாக்கம் செய்வதற்கு பொறுப்பளிக்கப்பட்ட நிறுவனமாகும். மத்திய கல்வியமைச்சின் கீழ்வரும் தேசிய பாடசாலைகள் மாகாண நிர்வாகத்துக்குரிய பாடசாலைகள் என்பவற்றை நிர்வகிப்பதும் அவற்றினூடான மாகாணத்தின் அனைத்து சிறார்களுக்கும் தரமான பாடசாலைக் கல்வியை வழங்குவதும் இந்நிறுவனத்தின் பொறுப்பாகும். இப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு தேவையான மனிதவளம், பௌதீக வளம், நிதி ஏற்பாடுகள் என்பன அவசிய மானவையாகும். வடமாகாண கல்வித் துறையில் மனித வளத்தைக் கருத்திற் கொள்ளும் போது கல்வித் துறையை இயங்கச் செய்வதற்கு தேவையான தகுதியான ஆளணி வளம் பற்றாக் குறையாக இருப்பது அனைவரும் அறிந்த விடயமே. இருப்பினும் சேவை பெறுநர்கள் தமக்கு மிகத் தரமான சேவை வழங்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இருப்பது பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நெருக்கடி நிலையை உருவாக்குகின்றது. பாடவிதான அமுலாக்கம் தொடக்கம் போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளை அமுலாக்குவது வரை பல்வேறு செயற்பாடுகளிலும் சேவை பெறுநர்களின் அதிருப்திகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல் மனிதவளப் பகிர்வு தொடர்பிலும் பிராந்திய அடிப்படையில் அதிருப்திகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதற்கு இரண்டு காரணிகள் பங்களிப்பு செய்துள்ளன. முதலாவதாக வடக்கு மாகாணத்தின் விசேட தன்மையும் சில நாடளாவிய கொள்கைகள் பொருந்தியமையாமையும் ஒருகாரணமாகும். வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் குடித்தொகை செறிவான தாகவும், அதிகளவான அரசு பணியாளர்கள் பரம்பலில் கொண்டமைந்ததாகவும் காணப்படுகின்றது.

இதனால் ஏனைய மாவட்டங்களிலுள்ள அரச நிறுவனங்கள் இயங்குவதற்கும் அரச சேவையை வழங்குவதற்கும் யாழ். மாவட்டத்திலிருந்து அரச ஊழியர்களை பகிரவேண்டியுள்ளது. இது இவ்வாறிருக்க பெரும்பாலான அரச உத்தியோகத்தர்கள் பல்வேறு காரணங்களின் நிமித்தம் தமது வாழ்விடத்திற்கு அருகாமையிலேயே பணியாற்றவிருப்புகின்றனர். இதன் நிமித்தம் இவர்களில் பலர் நிர்வாகத்திற்கு பல்வேறு நெருக்கடிகளை உருவாக்குகின்றனர்.

இரண்டாவதாக கல்வித்துறையில் ஆளணி நியமனம் இடைநிலைப்படுத்தல், இடமாற்றங்கள் தொடர்பில் தூர நோக்கோடுகூடிய நன்கு பரீட்சித்து சீரமைக்கப்பட்ட கொள்கைகள் குறைவாகவே காணப்பட்டமையினால் முன்னைய காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆளணி நியமனங்கள் இடைநிலைப் படுத்தல்கள் இடமாற்றங்கள் பல்வேறு குறைபாடுகளுடனேயே இடம்பெற்றிருந்தன. இந்த நிலையினை பலர் தமக்கு சாதகமாக பயன்படுத்தியிருந்தனர். இவற்றினை சீரமைப்பது சிலருக்கு இடைஞ்சலாக உள்ளது. இவர்கள் பல்வேறு நெருக்கடிகளை தோற்றுவித்து சமநிலையை குழப்புகின்றனர்.

பௌதீக வளங்கள், நிதிவளங்களை கருத்திற்கொள்ளும் போது வடக்கு மாகாணத்திலுள்ள தேசிய மற்றும் மாகாணப்பாடசாலைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பொதுவான வளங்கள் கிடைக்கப்பெறுவதில்லை. இதனால் கிடைக்கப்பெறும் வளங்களை சில நியமனங்களினடிப்படையில் பகிர நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுண்டு. தமது பாடசாலைகளுக்கு இவ்வளங்களை கவர்ந்துகொள்வதற்காக சில சமூகங்கள் முறையற்ற வகையில் அழுத்தங்களை உருவாக்குவதுண்டு. சில சந்தர்ப்பங்களில் இதனால் நியமங்கள் மீறப்பட்டு நெருக்கடிகள் உருவாவதுண்டு.

நாம் வாழும் சமூகத்தில் ஒழுக்க விழுமியங்களின் சிதைவு காரணமாக பல அசாதாரணமான நிகழ்வுகள் நடைபெறுவது சாதாரணமாகியிருப்பதை செய்தி ஊடகங்களினூடாக அறியமுடிகின்றது. அரச ஊழியர்களும் இச்சமூகத்தை சேர்ந்தவர்களேயாவார். அவர்களில் சிலர் ஒழுக்கவிழுமியங்களை பின்பற்றாது நடந்துகொள்வதனால் சேவை பெறுநர்கள் பாதிப்படைகின்றனர். இதுபற்றி பாதிப்படைந்தவர்களும் பொதுமக்களும் முறைப்பாடுகள் முன்வைக்கும் இவர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. அவர்கள் தம்மை தற்காத்துக்கொள்ளவும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை முறியடிக்கவும் அவற்றை முன்னெடுப்பவர்களை தாக்குவதற்கும் நிர்வாகத்தை குழப்புவதற்கும் பல்வேறு உபாயங்களை பின்பற்றுகின்றனர். இதனால் நிர்வாகம் பெரும் நெருக்கடிக்குள்ளாகின்றது.

இவ்வாறான நெருக்கடிகளுக்கு முகம்கொடுப்பது திணைக்களத்தலைவர்களுக்கு அதிக நேரவிரயமான,

தொடர்ச்சி▼

# வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடம் நிலைமைய விளக்கி தற்போதைய பணிப்பாளர் அறிக்கை

தொடர்ச்சி▲

பயனற்ற விடயமாகக் காணப்படும். இதனால் கல்வி அபிவிருத்திக்கு செலவிடவேண்டிய நேரங்கள் விரயமாகி விடும். இந்நெருக்கடிகளை தணிப்பதற்கான நடவடிக்கைகளை திணைக்களத்தலைவர்கள் தனித்து முன்னெடுக்க முடியாது. விஞ்ஞான ரீதியான ஆய்வுகளும் அதனை அடியொற்றிய சீர் திருத்தங்களுமே நெருக்கடிகளை இல்லாதொழிக்கும். ஆனால் அதற்கான ஏற்பாடுகள் போதியளவு இல்லை. பதிலாக பல்வேறு தனிப்பட்டவர்களை சமூக ஊடகங்களில் வசைபாடுவதே கலாச்சாரமாக முகிழ்ப்பு பெற்றுள்ளது. ஆக்கபூர்வமான விமர்சனங்கள் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உறு துணையானவை. மாறாக உண்மைத் தன்மையினை ஆராயாமல் தரவுகள் தகவல்களை பகுப்பாய்வு செய்யாமல் சமூகஊடகங்களில்பகிரப்படும்புனைகதைகள் பலரது அர்ப்பணிப்பைச் சிதைத்து கல்வித்துறையை பாதிக்கக்கூடியது.

கல்வியமைச்சின் செயலாளர் கல்வித் திணைக்களத்தின் மீது முறையற்ற அழுத்தம் விடுப்பதாகவும் அதன் காரணமாக சிலர் விண்ணப்பிக்க வில்லை என்பதாக சில சமூக ஊடகங்களில் கருத்து வெளியிடப்பட்டிருப்பது உண்மைக்குப் புறம்பானதாகும். எனது தனிப்பட்ட அனுபவத்திலேயும் செயலாளரால் இவ்வாறான அழுத்தங்கள் எவையும் பிரயோகிக்கப்படவில்லை என்பதனை உறுதியுடன் கூறமுடிகின்றது. ஆளணி நிர்வாகம் மற்றும் வளப் பகிர்வுகளில் பாராபட்சமற்ற தன்மையும் வெளிப்படையான கொள்கையாக்கங்களும் இச்செயலாளரின் தலைமைத்துவத்தின் இடைநிலைப்படுத்தல்கள் கீழ் ஏற்படுக்கப்பட்டுள்ளது என்பதுடன் ஆளாணி மற்றும் மாணவர் அனுமதிகளில் முறையற்ற தலையீடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்பதே உண்மை. கல்வியமைச்சினால் ஆக்கபூர்வமான கொள்கைகள் வகுக்கப்பட்ட காரணத்தினால் மாகாண கல்வித்திணைக்களம் ஒத்திசைவுடன் அக்கொள்கைகளை அமுலாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டு வந்தமையும் மாகாண கல்விச்செயலாளருக்கும் மாகாண கல்விப்பணிப்பாளரிற்கும் இடையில் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒத்திசைவு காணப்பட்டமையும் எல்லோராலும் அவதானிக்கக்கூடியதாக காணப்பட்டிருந்தது. இந்நிலையில் செயலாளரின் முறையற்ற அழுத்தத்திற்கு அஞ்சி மாகாண கல்விப்பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கவில்லை என்ற வாதம் பொருத்தமற்றது என்பதுடன் பதவியொன்றிற்கு விண்ணப்பிப்பதும் விண்ணப்பிக்காமலிருப்பதும் தனிநபரொருவரின் சுயவிருப்பு சார்ந்த விடயமாகும் என்பதை நாம் கருத்திற் கொள்ளவேண்டும்.

– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

1. எமது 02-03-2025 “காலை முரசு“ செய்தியில் “மேலிடம்“ என்று நாம் குறிப்பிட்டவர் வடக்கு மாகாணக் கல்விச் செயலாளரை என்று அர்த்தம் பண்ணி, அதனடிப்படையில் இந்த விளக்கத்தை மாகாணக் கல்விப் பணிப்பாளர் அனுப்பியிருக்கின்றார் என்று தோன்றுகின்றது. அப்படி ஓர் அர்த்தத்தை எமது அந்தச் செய்தி தந்திருக்குமானால் அதற்காக சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கும் பாதிப்புக்கும் எமது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2. மாகாண நிர்வாகத்தைப் பொறுத்தவரை“மேலிடம்“என்பதுஆளுநர்தரம்வரை பல படிநிலைகளைக் கொண்டது என்பதையும் நினைவூட்டுகின்றோம்.

(ஆ-ர்)



# ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட 10 பேருக்குப் பிணை

(க.கிஷாந்தன்)

கடந்த வருடம் மே மாதம் 30 ஆம் திகதி களனிவெளி பெருந்தோட்ட யாக்கத்திற்கு உட்பட்ட பீட்ரூ தோட்ட தொழிற்சாலையில் அத்துமீறி நுழைந்தமை தொடர்பாகக் குற்றச்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு எதிராக பெருந் தோட்ட நிறுவனத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நுவரெலியா நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் ஒன்பதாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த வழக்கில் சந்தேகநபர்களாக ஜீவன் தொண்டமான் உட்பட 10 சந்தேக நபர்களின் பெயர்கள் முன் வைக்கப்பட்டிருந்தன. அவர்களை தலா 5 லட்சம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் செல்ல அனுமதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவ்வழக்கில் ஜீவன் தொண்டமான் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி பெருமாள் ராஜதுரை மற்றும் சான் குலத்துங்க ஆகியோர் ஆஜராகினர்.

அதேநேரம் களனிவெளி பெருந் தோட்ட யாக்கத்திற்கு சார்பாக சட்டத் தரணிகளான பாலித்த சுபசிங்க மற்றும் சுரேஷ் கயான் ஆகியோர் பிரசன்ன மாகினர்.



# அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நேற்று எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சு

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவினருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தாங்கள் எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இங்கு எதிர்க்கட்சித் தலைவரை தெளிவூட்டினர். கிட்டிய காலத்தில் அவர்கள் எதிர்நோக்கிவரும் விடயங்களை நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுப்பார் என எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது அவர்களுக்கு உறுதியளித்தார்.

தற்போதைய அரசாங்கம் முன்வைத்துள்ள வரவு - செலவுத்திட்டத்தின் ஊடாக வைத்தியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு உட்பட சம்பள வெட்டுக்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அவர்கள் தெளிவூட்டினர்.

இச்சந்திப்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உத்தியோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜயவர்தன, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் கலந்து கொண்டனர்.





# யுத்தம் முடிந்து 16 ஆண்டுகளிலும் ஒதுக்கீட்டை விட வடக்கில் 312 கோடி ரூபா அதிகம் செலவிடப்பட்டது

## ஆக ஆறு வருடங்களில் 27 கோடி ரூபாவே திரும்பிச் சென்றது

**(ந.லோகதயாளன்)**

வடக்கு மாகாண சபைக்கு 2009 ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான 16 ஆண்டுகளில் கிடைத்த மொத்தப் பணத்தில் 272.04 மில்லியன் (27 கோடி 20 லட்சத்து 4 ஆயிரம்) ரூபா மட்டுமே திரும்பிச் சென்றது என்ச் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எழுத்தில் பதில் வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கு விடுவிக்கப்படும் நிதிகள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளாது மத்திய அரசிற்குத் திரும்பிச் செல்வதாக தொடர்ச்சியாக பலரும் குற்றம் சாட்டியமையோடு இந்த ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவும் இதே கருத்தை தெரிவித்திருந்தார்.


இது தொடர்பில் நாடாளுமன்றச் செயலாளர் கடந்த 27 ஆம் திகதிய கடிதம் மூலம் வடக்கு மாகாணத்திற்கு 2009 ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான 16 ஆண்டுகளில் கிடைத்த மொத்தப் பணத்தில் இருந்து மத்திக்கு மீண்டும் திருப்பி விட்ட தொகையை ஆண்டு ரீதியில் அனுப்பி வைக்குமாறு கோரியிருந்தார். இதற்கு வடக்கு மாகாண பிரதம செயலாளர் 2025-03-03 ஆம் திகதிய கடிதம் மூலம் பதில் வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் வழங்கிய பதிலில் 16 ஆண்டுகாலத்தில் 6 ஆண்டுகள் பகுதி பகுதியாக மொத்தம் 272.04 மில்லியன் திரும்பியுள்ளது. இதே 16 ஆண்டு காலத்தின் 10 வருடங்களில் மேலதிக செலவு ஏற்பட்டு கணக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டது. அதன் தொகையாக 3 ஆயிரத்து 118.69 மில்லியன் (311 கோடி 86 லட்சத்து 90 ஆயிரம்) ரூபா காணப்படுவதாகவும் பிரதம செயலாளர் எழுத்தில் பதிலளித்துள்ளார்.

(பட்டியலில் தொகை மில்லியனில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

**Allocation of Funds, Imprest Receipts and Expenditure to the Northern Provincial Council (2009-2024)**

| Year | Source of Government Fund | Received Allocation | Received Imprest | Expenditure | Balance | Remarks |
|---|---|---|---|---|---|---|
| 2009 | Block Grant | 8,348.66 | 7,963.00 | 7,820.80 | 142.20 | Balance imprest of Block grant & Provincial fund Utilized for the bills under CBG & PSDG |
| | Criteria Based Grant | 331.63 | 240.78 | 276.48 | -35.70 | |
| | PSDG | 1,235.08 | 946.77 | 1,201.60 | -254.83 | |
| | Nawodaya | 12.00 | 12.00 | 11.45 | 0.55 | Accumalated to the Provincial Fund |
| | ESDP-World Bank | 208.00 | 206.00 | 185.75 | 20.25 | |
| | HSDP-World Bank | 553.00 | 536.00 | 355.50 | 180.50 | |
| | UNICEF | 146.32 | 146.32 | 135.91 | 10.41 | |
| | UNFPA | 14.07 | 14.07 | 14.07 | 0.00 | |
| | USDA | 100.00 | 75.00 | 75.00 | 0.00 | |
| | TOTAL | 10,948.76 | 10,139.94 | 10,076.56 | 63.38 | |
| 2010 | Block Grant | 8,700.00 | 8,700.00 | 8,676.22 | 23.78 | Accumalated to the Provincial Fund |
| | PSDG | 1,205.00 | 1,205.00 | 1,202.18 | 2.82 | |
| | Criteria Based Grant | 300.00 | 255.00 | 298.61 | -43.61 | Provincial fund Utilized for the bills under CBG & PSDG |
| | HSDP-World Bank | 974.70 | 587.24 | 773.34 | -186.10 | |
| | ESDP-World Bank | 300.00 | 300.00 | 299.99 | 0.01 | Accumalated to the Provincial Fund |
| | UNICEF | 239.14 | 239.14 | 238.30 | 0.84 | |
| | UNFPA | 8.32 | 8.32 | 8.32 | 0.00 | |
| | Nawodaya | 30.00 | 25.47 | 25.47 | 0.00 | |
| | TOTAL | 11,757.16 | 11,320.17 | 11,522.43 | -202.26 | |
| 2011 | Block Grant | 9,317.74 | 9,317.74 | 9,707.39 | -389.65 | Provincial fund Utilized for the bills under CBG & PSDG |
| | Criteria Based Grant | 275.00 | 263.83 | 261.80 | 2.03 | |
| | PSDG | 1,150.00 | 896.00 | 1,040.12 | -144.12 | |
| | Nawodaya | 30.00 | 27.00 | 27.00 | 0.00 | |
| | ESDP-World Bank | 80.50 | 58.88 | 58.88 | 0.00 | |
| | UNICEF | 309.00 | 305.35 | 305.50 | -0.15 | |
| | UNFPA | 45.00 | 2.03 | 2.03 | 0.00 | |
| | NPC Building Complex | 100.00 | 0.00 | 0.00 | 0.00 | |
| | TOTAL | 11,307.24 | 10,870.83 | 11,402.72 | -531.89 | |
| 2012 | Block Grant | 8,776.79 | 8,500.30 | 8,500.30 | 0.00 | |
| | Criteria Based Grant | 267.54 | 160.52 | 194.50 | -33.98 | Provincial fund utilized to settle the urgent bills |
| | PSDG | 1,117.21 | 616.11 | 974.42 | -358.31 | |
| | HCFKE / TSEP | 144.00 | 125.00 | 125.00 | 0.00 | |
| | HSDP | 5.00 | 0.00 | 0.00 | 0.00 | |
| | UNICEF | 286.61 | 286.61 | 286.61 | 0.00 | |
| | UNFPA / USDA | 40.00 | 3.71 | 3.71 | 0.00 | |
| | 1000 Schools | 50.00 | 40.95 | 38.50 | 2.45 | Accumalated to the Provincial Fund |
| | TOTAL | 10,687.15 | 9,733.20 | 10,123.04 | -389.84 | |
| 2013 | Block Grant | 10,795.30 | 10,795.30 | 10,795.30 | 0.00 | |
| | Criteria Based Grant | 195.00 | 195.00 | 194.05 | 0.95 | Accumalated to the Provincial Fund |
| | PSDG | 1,030.00 | 618.00 | 850.58 | -232.58 | Provincial fund utilized to settle the urgent bills |
| | HCFKE / TSEP | 310.00 | 310.00 | 310.00 | 0.00 | |
| | HSDP | 100.00 | 0.00 | 0.00 | 0.00 | |
| | 1000 Schools | 35.00 | 28.00 | 28.00 | 0.00 | |
| | TOTAL | 12,465.30 | 11,946.30 | 12,177.93 | -231.63 | |
| 2014 | Block Grant | 14,591.00 | 12,642.00 | 12,642.00 | 0.00 | |
| | Criteria Based Grant | 393.00 | 280.00 | 391.44 | -111.44 | Provincial fund utilized to settle the urgent bills |
| | PSDG | 1,035.00 | 1,025.05 | 1,023.78 | 1.27 | Accumalated to the Provincial Fund |
| | HCFKE / TSEP | 290.00 | 286.47 | 286.47 | 0.00 | |
| | HSDP | 180.00 | 180.00 | 180.00 | 0.00 | |
| | 1000 Schools | 35.00 | 34.79 | 34.79 | 0.00 | |
| | TOTAL | 16,524.00 | 14,448.31 | 14,558.48 | -110.17 | |
| 2015 | Block Grant | 16,267.93 | 16,267.93 | 16,267.93 | 0.00 | |
| | Criteria Based Grant | 400.00 | 1,690.00 | 387.22 | -121.07 | Provincial fund utilized to settle the urgent bills |
| | PSDG | 1,440.00 | | 1,423.85 | | |
| | HCFKE / TSEP | 387.66 | 335.61 | 335.61 | 0.00 | |
| | HSDP | 355.00 | 355.00 | 355.00 | 0.00 | |
| | 1000 Schools | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | |
| | Construction of New office building | 150.00 | 150.00 | 27.33 | 122.67 | Accumalated to the Provincial fund for the continuation work |
| | TOTAL | 19,000.59 | 18,798.54 | 18,796.94 | 1.60 | |
| 2016 | Block Grant | 16,966.38 | 16,757.18 | 16,757.18 | 0.00 | |
| | Criteria Based Grant | 475.00 | 437.00 | 460.58 | -23.58 | Provincial fund utilized to settle the urgent bills |
| | PSDG | 3,238.30 | 1,800.00 | 2,311.04 | -511.04 | |
| | HCFKE / TSEP | 465.00 | 289.00 | 289.00 | 0.00 | |
| | HSDP | 365.00 | 365.00 | 365.00 | 0.00 | |
| | 1000 Schools | | | | 0.00 | |
| | Construction of New office building | 150.00 | 74.00 | 92.61 | -18.61 | Provincial fund utilized to settle the urgent bills |
| | NSBS | 1,450.00 | 685.35 | 685.35 | 0.00 | |
| | TOTAL | 23,109.68 | 20,407.53 | 20,960.76 | -553.23 | |
| 2017 | Block Grant | 17,077.53 | 17,077.53 | 17,077.53 | 0.00 | |
| | Criteria Based Grant | 605.70 | 605.70 | 587.77 | 17.93 | Imprest of CBG Utilized for the bills under PSDG, balance imprest accumalated to the provincial fund |
| | PSDG | 4,127.78 | 3,620.50 | 3,634.33 | -13.83 | |
| | HCFKE / TSEP | 315.00 | 252.00 | 252.00 | 0.00 | |
| | HSDP | 360.00 | 360.00 | 359.91 | 0.09 | |
| | NSBS | 1,250.00 | 1,153.00 | 1,153.00 | 0.00 | |
| | TOTAL | 23,736.01 | 23,068.73 | 23,064.54 | 4.19 | |
| 2018 | Block Grant | 19,034.94 | 19,034.94 | 19,034.94 | 0.00 | |
| | Criteria Based Grant | 549.06 | 521.72 | 531.62 | -9.90 | Provincial fund utilized to settle the urgent bills |
| | PSDG | 3,081.87 | 1,828.28 | 1,841.83 | -13.55 | |
| | HCFKE / TSEP | 79.00 | 79.00 | 79.00 | 0.00 | |
| | HSDP | 424.80 | 324.80 | 324.79 | 0.01 | |
| | GEMP | 27.50 | 0.00 | 0.00 | 0.00 | |
| | TOTAL | 23,197.17 | 21,788.74 | 21,812.18 | -23.44 | |
| 2019 | Block Grant | 21,437.50 | 21,437.50 | 21,437.50 | 0.00 | |
| | Criteria Based Grant | 551.00 | 300.00 | 263.36 | 36.64 | Balance of CBG & Provincial fund utlized to settle the PSDG bills |
| | PSDG | 3,303.00 | 1,677.00 | 1,941.67 | -314.67 | |
| | HSDP | 100.00 | 99.68 | 99.58 | 0.10 | Accumalated to the Provincial fund |
| | GEMP | 200.00 | 0.00 | 0.00 | 0.00 | |
| | PHSSP | 150.00 | 150.00 | 149.99 | 0.01 | |
| | TOTAL | 25,741.50 | 23,614.18 | 23,892.10 | -277.92 | |
| 2020 | Block Grant | 25,322.00 | 25,322.00 | 25,322.00 | 0.00 | |
| | Criteria Based Grant | 253.81 | 253.81 | 253.64 | 0.17 | Accumalated to the Provincial fund |
| | PSDG | 1,574.86 | 1,574.86 | 1,510.67 | 64.19 | Budgeted as provincial PSDG in the Year 2021 |
| | GEMP | 45.00 | 45.00 | 42.70 | 2.30 | Accumalated to the Provincial fund to make the supplementary budget |
| | PHSSP | 240.00 | 240.00 | 239.97 | 0.03 | Accumalated to the Provincial fund |
| | TOTAL | 27,435.67 | 27,435.67 | 27,368.98 | 66.69 | |
| 2021 | Block Grant | 26,799.00 | 26,799.00 | 26,799.00 | 0.00 | |
| | Criteria Based Grant | 582.00 | 319.45 | 452.22 | -132.77 | Provincial fund utilized to settle the urgent bills |
| | PSDG | 2,988.81 | 1,643.85 | 2,047.81 | -403.96 | |
| | Provincial PSDG | 64.00 | 41.08 | 41.08 | 0.00 | |
| | GEMP | 220.00 | 220.00 | 219.71 | 0.29 | Accumalated to the Provincial fund to make the supplementary budget |
| | PHSSP | 330.00 | 330.00 | 330.00 | 0.00 | |
| | Anicut | 50.00 | 19.00 | 26.19 | -7.19 | Provincial fund utilized to settle the urgent bills |
| | Kurai Tank | 100.00 | 70.00 | 77.79 | -7.79 | |
| | Development of Rural Hospital | 245.57 | 199.70 | 194.57 | 5.13 | Accumalated to the Provincial fund |
| | Development of Ayurvedic Hospital | 41.00 | 36.40 | 36.40 | 0.00 | |
| | Rural Sports Development | 108.40 | 108.36 | 104.72 | 3.64 | Accumalated to the the Provincial fund |
| | Production of Organic fertilizer | 500.00 | 325.00 | 325.00 | 0.00 | |
| | TOTAL | 32,028.78 | 30,111.84 | 30,654.49 | -542.65 | |
| 2022 | Block Grant | 28,400.00 | 27,600.35 | 27,600.36 | 0.00 | |
| | Criteria Based Grant | 115.00 | 64.40 | 111.08 | -46.68 | Provincial fund utilized to settle the urgent bills |
| | PSDG | 1,243.00 | 667.50 | 689.54 | -22.04 | |
| | GEMP | 340.00 | 340.00 | 333.58 | 6.42 | Accumalated to the the Provincial fund to make the supplementary budget |
| | PHSSP | 550.04 | 550.00 | 549.34 | 0.66 | Accumalated to the Provincial fund to make the supplementary budget |
| | Anicut | 20.00 | 7.00 | 6.73 | 0.27 | Accumalated to the Provincial fund |
| | Kurai Tank | 22.00 | 22.00 | 22.00 | 0.00 | |
| | Development of Ayurvedic Hospital | 2.00 | 2.00 | 2.00 | 0.00 | |
| | Production of Organic fertilizer | 175.00 | 142.00 | 27.03 | 114.97 | Accumalated to the Provincial fund to enable Supplementary budget for the continuation work |
| | TOTAL | 30,867.04 | 29,395.26 | 29,341.66 | 53.60 | |
| 2023 | Block Grant | 34,550.00 | 32,254.46 | 32,254.46 | 0.00 | |
| | Criteria Based Grant | 386.00 | 193.00 | 171.46 | 21.54 | Balance of CBG & Provincial fund utlized to settle the PSDG bills |
| | PSDG | 2,190.00 | 1,114.30 | 1,444.53 | -330.23 | |
| | GEMP | 440.00 | 410.00 | 374.94 | 35.06 | Accumalated to the Provincial fund to enable supplementary budget |
| | PHSSP | 1,444.71 | 1,444.00 | 1,440.28 | 3.72 | Accumalated to the Provincial fund to enable supplementary budget |
| | Production of Organic fertilizer | 61.45 | 61.45 | 46.80 | 14.65 | Accumalated to the Provincial fund to enable supplementary budget |
| | TOTAL | 39,072.16 | 35,477.21 | 35,732.47 | -255.26 | |
| 2024 | Block Grant | 38,193.89 | 37,087.57 | 37,087.57 | 0.00 | |
| | Criteria Based Grant | 644.00 | 508.30 | 507.21 | 1.09 | Accumalated to the Provincial fund |
| | PSDG | 3,305.00 | 2,256.00 | 2,256.00 | 0.00 | |
| | PSSP | 404.42 | 351.42 | 351.42 | 0.00 | |
| | GEMP | 604.07 | 604.07 | 517.58 | 86.49 | Accumalated to the Provincial fund to enable supplementary in the Year 2025 |
| | TOTAL | 43,151.38 | 40,807.36 | 40,719.78 | 87.58 | |



# ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியில் சேர தமிழரசுக்கு அழைப்பு விடுக்கின்றார் சித்தர்!

## சி.வி.கே.சிவஞானத்துக்கு அவர் பதில் கடிதம்

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாக நடைமுறைச் சாத்தியமான வகையில் எமது ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியுடன் பேச்சுக்களை நடத்தக் கூடிய தீர்மானம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மேற்கொண்டு அறியத் தருவீர்களானால் அது பற்றி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுவில் பேசி சாதகமான பதிலைத் தங்களுக்கு அறியத் தரமுடியும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரும் புளொட் தலைவருமான த.சித்தார்த்தன் நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து செயற்படுவதற்கான உங்கள் விருப்பத்தை தெரியப்படுத்தி நீங்கள் அனுப்பி வைத்த கடிதம் கிடைக்கப்பெற்றேன். இன நலன் குறித்து எங்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒற்றுமை பற்றி கடிதத்தில் நீங்கள் தெரிவித்துள்ள விடயங்களில் எக்காலத்திலும் நாங்கள் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பவர்கள் அல்லர்.

உள்ளூராட்சித் தேர்தலில் சில இடங்களிலாவது ஒன்றாக போட்டியிடுவது பற்றி ஆராய விரும்பும் நீங்கள், தற்போது நாம் அமைத்துள்ள கூட்டணி உங்களுக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் அளிப்பதாகவும், உங்கள் கட்சிக்கு தனித்துப் போட்டியிடும் சூழலை உருவாக்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டு தேர்தல்களைச் சந்திக்கும் நிலை கடந்த 2023ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிப்பை அடுத்தே ஏற்பட்டது. தனித்துப் போட்டியிட்டு பின்னர் இணைந்து ஆட்சி அமைக்கும் எண்ணக்கருவை தங்களது மத்திய குழு மட்டக்களப்பில் கூடி எடுத்தீர்கள். இதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட்டு தமிழரசுக் கட்சி வெளியேறியது. பிரிந்து நின்று செயற்படுவதால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளை ஆணித்தரமாக நாம் முன்வைத்தபோதும் தமிழரசுக் கட்சியின் செயல் தலைவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மறைந்த சம்பந்தன் அண்ணரிடம் எமது நிலைப்பாட்டை நாம் நேரடியாக முன்வைத்த போதும் கூட அவரும் தமிழரசுக் கட்சியின் முடிவினை ஏற்று செயற்படுமாறு எம்மை அறிவுறித்தினார்.

அன்று கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிய பின்னர் நாமும் ரெலோ அமைப்பும் இயன்ற வரையிலும் ஏனைய தமிழ் அமைப்புகளை ஐக்கியப்படுத்தி கூட்டமைப்பாக செயற்படும் நோக்கில் மேலும் மூன்று அரசியல் கட்சிகளை இணைத்து கூட்டமைப்பாக பயணிக்க தொடங்கினோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் அதன் அங்கத்துவக் கட்சிகளினதும் தொடர்ச்சியான பிளவுகளினால் ஏற்பட்ட மோசமான விளைவுகளை கடந்த நாடளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களும் ஆழமாக உணர்ந்துகொண்டோம். மேலும் கடந்த நாடளுமன்றத் தேர்தலில் ஐந்து கட்சிகளாக இணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகப் போட்டியிட்ட நாம், நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கு மிகவும் அவசியமான ஒற்றுமை எனும் விடயத்தை மேலும் வலுவானதாக்க சாத்தியமான வகையில் மேலும் சில அமைப்புகளை இணைத்துப் பயணிக்கத் தீர்மானித்து தொடர்ச்சியாக மேற்கொண்ட செயற்பாடுகளின் பலனாகவே இன்று பல கட்சிகள் இணைந்த கூட்டணியொன்றை உருவாக்க முடிந்துள்ளது.

நீங்கள் விரும்புவதுபோல, தமிழரசுக் கட்சியுடன் இக்கூட்டணியும் இணைந்து செயற்படுவதன் மூலம் தமிழ்த் தேசியத்திற்கு மேலும் வலுச் சேர்க்க வேண்டும் என்பதில் நாமும் பெரு விருப்பம் கொண்டுள்ளோம். எனவே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாக நடைமுறைச் சாத்தியமான வகையில் எமது கூட்டணியுடன் பேச்சுக்களை நடத்தக் கூடிய தீர்மானம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மேற்கொண்டு அறியத் தருவீர்களானால் அது பற்றி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் நிறைவேற்றுக் குழுவில் பேசி சாதகமான பதிலைத் தங்களுக்கு அறியத் தரமுடியும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். – என்று உள்ளது.



# விக்கியின் கட்சி தன் மான் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுவதாக அறிவிப்பு!

தமிழ் மக்கள் கூட்டணி வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துத் தனது மான் சின்னத்திலேயே போட்டியிடும் என்ற முடிவை அக்கட்சியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி அழைத்ததன் பேரில் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட முடியுமா என்பது பற்றி எமது கட்சியால் ஆராயப்பட்டது. முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் கூட்டாகத் தேர்தலில் போட்டியிட்ட போது சில மாவட்டங்களில் யானை சின்னத்திலும் (ஐ.தே. கட்சியின் தேர்தல் சின்னம்) வேறு சில மாவட்டங்களில் தாமரை மொட்டு சின்னத்திலும் (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் சின்னம்) இன்னும் சிலவற்றில் பொது சின்னமொன்றிலும் போட்டியிட முடிவெடுத்தன. அது போல் எமது தனித்துவத்தை விட்டுக்கொடுக்காமல் ஒரு போட்டி தவிர்க்கும் ஏற்பாட்டினை எட்ட முடியுமா என்று ஆராயப்பட்டது. எனினும் அவ்வாறான ஏற்பாட்டுக்கு இடம் இல்லை என்று தெரியவந்தது. தமிழ்த் தேசிய நலனின் அடிப்படையிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் அட்சர கணித முறையின் அடிப்படையிலும் தமிழ் மக்கள் கூட்டணி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்து மான் சின்னத்திலேயே போட்டியிடும் என்ற முடிவுக்கு வந்திருப்பதை மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன். - என்று உள்ளது.

# சூடு பட்டு சிகிச்சை பெற்று வரும் இந்திய மீனவரை பார்க்க சிறையில் இருக்கும் சக மீனவர்கள் ஆவல்!

## தம்மைச் சந்தித்த சிறிதரன் எம்.பியிடம் நேரில் தெரிவித்தனர்

(ந.லோகதயாளன்)




தம்மோடு பயணித்த சமயம் துப்பாக்கிச் சூடு பட்டுப் படுகாயம் அடைந்த சக மீனவரைப் பார்வையிட உதவுமாறு சிறையில் இருக்கும் இந்திய மீனவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடம் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள இந்திய மீனவர்களை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். இதன்போதே இந்திய மீனவர்களால் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

“இலங்கை கடற்படையினர் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி எம்மை கைது செய்த சமயம் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த மீனவர்களில் ஒருவர் இன்றுவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

“சிகிச்சை பெற்று வரும் சக மீனவரை ஒரு தடவை பார்வையிட விரும்புகின்றோம். எனவே எம்மை வைத்தியசாலைக்கோ அல்லது படுகாயமடைந்தவரை ஒரு தடவை சிறைச்சாலைக்கு அழைத்து வருவதன் மூலமோ அந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தாருங்கள்.!” - என்று அவர்கள் சிறிதரன் எம்.பியிடம் கோரிக்கை விடுத்தனர்.

தற்போது வைத்தியசாலையில் இருக்கும் இந்திய மீனவரை சிறையில் இருப்பவர்கள் பார்வையிட முடியுமா, அதற்கு சட்ட ஏற்பாடுகள் என்ன என்பது தொடர்பில் ஆராய்ந்து அதனை மேற்கொள்ளக்கூடிய விடயமாக இருப்பின் அடுத்த தீதிமன்ற தவணையில் மேற்கொள்ள முயற்சிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பதிலளித்தார்.






# வவுனியா நகரத்தில் உணவகம் மீது நேற்றிரவு தாக்குதல்; ஒருவர் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா நகரப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா நகர மணிக்கூட்டு கோபுரத்திற்கு அண்மையில் உள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு சில இளைஞர்கள் சென்றுள்ளனர். இதன்போது அதில் ஒரு இளைஞர் கையில் கொண்டு சென்ற பியர் போத்தலால் அந்த சைவ உணவகத்தின் கண்ணாடிப் பெட்டியின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனால் கண்ணாடி பெட்டி உடைந்து சேதமடைந்துள்ளது. சம்பவம் தொடர்பில் உணவக உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியமையை அடுத்து அங்கு வந்த வவுனியா பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# வவுனியா உணவகத்தில் வடைக்குள் சட்டை ஊசி

வவுனியா நிருபர்

வவுனியாவில் உள்ள சைவ உணவகம் ஒன்றில் வாக்கப்பட்ட வடை ஒன்றிற்குள் சட்டை ஊசி ஒன்று காணப்பட்டுள்ளது.

வவுனியா, பழைய பேரூந்து நிலையம் முன்பாக உள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு நேற்று சென்ற ஒருவர் அங்கு வடையை கொள்வனவு செய்துள்ளார்.

வடையை வீட்டில் சென்று சாப்பிட்ட போது அவ் வடைக்குள் பெரிய சட்டை ஊசி ஒன்று காணபட்டுள்ளது. இதனையடுத்து அந்த வடையை அதன் முகாமையாளரிடம் காட்டி ஊசி காணப்பட்டமை தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டது.

தவறுதலாக இடம்பெற்றுள்ளதாகவும், இனிவரும் காலத்தில் இவ்வாறு நடைபெறாது எனவும் கூறி வடையை வாங்கியரிடம் சைவ உணகவ முகாமையாளர் மன்னிப்பு கோரியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.03.2025




இன்று சிறப்பான வாய்ப்பு காணப்படும். உங்கள் தனித்திறமையை பயன்படுத்தி உங்கள் இலக்குகளை முடிப்பீர்கள். மனதில் இருக்கும் தெளிவு காரணமாகச் சரியான முடிவை எடுப்பீர்கள்.

அதிக பணிகள் காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் தனித்த திறமை மூலம் உங்கள் பணிகளில் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். நீங்கள் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நல்ல பிணைப்பை உருவாக்குவீர்கள்.

உங்கள் திறமை மற்றும் நேர்மையான முயற்சி மூலம் உங்களுக்கு கூடுதல் ஊக்கத்தொகை கிடைக்கும். இன்றைய நாளுக்குத் தேவையான போதிய பணம் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சீரான பலன்கள் கிடைக்கும். விருந்தினர்களின் வருகை உங்களுக்கு உற்சாகமளிக்கும். அதிர்ஷ்டம் காரணமாக நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக பணியிடத்தில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். இன்று உங்கள் பதட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும். ஆன்மீக செயல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

இன்று முக்கிய பணிகளை உங்களால் முடிக்க இயலாது. உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது சில அசாதாரணமான தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலயை அளிக்கும். நீங்கள் சிறப்பாக திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்தியான மனநிலை காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான வார்த்தைகள் மூலம் அவரை மகிழ வைப்பது கடினமாக உணர்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. அதிகமாக சம்பாதித்தாலும் இன்று தேவையற்ற விஷயங்களுக்காக செலவு செய்ய நேரலாம்.




இன்று சவாலான சூழ்நிலை காணப்படும். இதனால் சமநிலை இழப்பீர்கள். நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் இதனை சமாளிக்க வேண்டும். பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க கவனமாக உரையாடவும்.

நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு ஒழுங்காக பணியாற்ற வேண்டும். உங்களின் முயற்சி சிறப்பாக இருந்தாலும் உங்கள் முதலாளிகளின் அங்கீகாரம் பெற இயலாது.

உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் மகிழ்ச்சியான போக்கை மேற்கொள்ளவேண்டும். அமைதியான போக்கு சூழ்நிலையின் தாக்கத்தை தணிக்கும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் சம்பாத்தியமும் குறைவாக இருப்பதன் காரணத்தால் பணத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.




இன்று உங்கள் ஆர்வம் மேம்படும் வகையிலான சூழ்நிலை காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். பயணங்கள் ஏற்படலாம்.

பணியிடத்தில் ஆச்சரியமும் உற்சாகமும் காணப்படும். உங்கள் கடின உழைப்புக்கான ஊக்கத்தொகை கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். அனுசரித்து போவதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை பராமரிக்க இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்களுக்கு உயர்வு நிலை கிடைக்கும். இதனால் நீங்கள் அதிகம் சம்பாதிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். நிகழ்வுகள் சீராக நடக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள். அவற்றின் மூலம் நன்மை விளையும்.

பணியிடத்தில் சிறந்த வளர்ச்சி காணப்படும். இன்று முழுவதும் மும்மரமாக இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் இன்று சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான தருணங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள இயலும்.

கணிசமான பண வரவு காணப்படும். உங்கள் தேவைகளைபூர்த்திசெய்துகொள்ளும்வகையில்நீங்கள்பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. வேதனையான சூழ்நிலையில் நீங்கள் பொறுமை இழந்து உணர்ச்சி வசப்படலாம். எதையும் லேசாக எடுத்துக்கொள்வதன் மூலம் நன்மை காணலாம். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு ஆறுதல் தரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. சில தவறுகள் காரணமாக வேலையில் முன்னேற்றம் காண்பது கடினம்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அவருடன் பேசும் போது நீங்கள் மென்மையான இனிமையான வார்த்தைகளை பேச வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

நடக்கும்போது கீழே விழ வாய்ப்புள்ளது.




இன்று சில கடினமான சவாலான சூழ்நிலையை கையாள வேண்டியிருக்கும். இறைவழிபாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் குழப்பமான சூழ்நிலை காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் உங்கள் துணையிடம் தீவிரமாக நடந்து கொள்வீர்கள். இந்தப் போக்கை தவிர்த்து நீங்கள் நட்போடு நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது.இதனால் கடன் வாங்க வேண்டிய சூழல் ஏற்படும்.

இன்று காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. என்றாலும், தக்க சமயத்தில் சிகிச்சை பெறுவதன் மூலம் குணம் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.03.2025




இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். உங்கள் இலக்குகள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். உங்கள் செயல்களின் மூலம் வெற்றி கிடைக்கு.

உங்கள் பணியில் நீங்கள் மிகுந்த திருப்தி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருபீர்கள். உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே அன்பு வளரும்.

பண வரவு உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும். அதிர்ஷ்டம் காரணமாக இன்று கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காமல் போகலாம். நீங்கள் உங்கள் சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். இந்தச் சவால்களை மேற்கொள்ள நீங்கள் திட்டமிட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது சிறந்ததல்ல.

பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரணமாக உங்கள் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் காணப்படும். இதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள பணத்தை பயன்படுத்த இயலாது.




இன்று விரும்பும் பலன்களை அடைய கடினமாக உழைக்க வேண்டும். இன்று அனுகூலமான நாளாக இருக்காது. நீங்கள் நம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும்.

பணியிடத்து சவாலான சூழ்நிலையை நீங்கள் பொறுமையோடு சமாளிக்க வேண்டும். பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்படும்.

பாதுகாப்பின்மை உணர்வு உங்களை பாதிக்கும். இதனால் உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி காணப்படாது.

உங்கள் வீட்டு பெரியவர்களின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.





இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழக்கும் வகையில் சில சவால்கள் காணப்படும். நன்மையான பலன்கள் காண அனுசரித்து நடக்க வேண்டும். தைரியமாக இருந்தால் சிறப்பாக உணரலாம்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திறமையாக பணியாற்ற கவனித்து ஒழுங்கு முறையுடன் பணியாற்ற முயல வேண்டும்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தும் வாய்ப்புளதால் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். நல்லுறவு வளர மென்மையாக நட்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் குடும்பத்துக்காக நீங்கள் தேவையின்றி பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

# கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் ஞாயிறன்று டி.பி.எஸ். ஜெயராஜின் நூல் வெளியீடு




கனடாவில் வாழும் இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான டி.பி.எஸ். ஜெயராஜ் எழுதிய “இலங்கையில் அரசியல் அதிகாரத்தின் வர்க்க மாற்றம்“ என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 9 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் இடம் பெறவிருக்கிறது.

மூத்த பத்திரிகையாளர் வீரகத்திதனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மூத்த பத்திரிகையாளர் அனந்த் பாலகிட்ணர் வெளியீட்டு உரையையும் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர் பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரனும் சட்டத்தரணியும் சமூக, அரசியல் செயற்பாட்டளருமான சுவஸ்திகா அருலிங்கமும் சமகால அரசியல் நிலைவரங்கள் பற்றிய உரைகளையும் நிகழ்த்துவர்.

